Register No. | | | | | | | | |

**FA6A** **6908–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

CONSTITUTIONAL LAW – II

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Enumerate the powers and functions of the President of India.

   இந்திய குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை எடுத்துக் கூறுக.

2. Examine the constitutional provisions relating to amendment of Indian Constitution.

   இந்திய அரசமைப்பு சட்டத்தை திருத்தம் செய்வதற்கான அரசமைப்பு சட்டவிதிமுறைகளை ஆராய்க.

3. State the conditions related to seeking of Advisory Jurisdiction vested with Supreme Court of India.

   இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு உட்பட்ட ஆலோசனை அதிகார வரம்பினை நாடுவதற்கு தொடர்புடைய நிபந்தனைகளைக் கூறுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State how the Vice-President of India is selected. Explain the importance of Vice-President.

   இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றார். குடியரசுத் துணைத் தலைவரின் முக்கியத்துவத்தை விளக்குக.

5. Discuss the administrative relationship between Central and State Governments.

மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையேயான நிர்வாக உறவுமுறைகளைப் பற்றி விவாதிக்கவும்.

6. Examine the structure, powers and functions of the Election Commission of India.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகளை ஆராய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Writ of Mandamus.

செயல் உறுத்தும் நீதிப்பேராணை.

(b) Attorney General of India.

இந்திய தலைமை வழக்குரைஞர்.

(c) Consolidated Fund of India.

இந்தியாவின் தொகுப்பு நிதி.

(d) Procedures on Sessions of Parliament.

நாடாளுமன்ற கூட்டத்தொடரின் நடைமுறைகள்.

(e) Union Public Service Commission.

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்.

(f) Distinguish National Emergency and State Emergency.

தேசிய நெருக்கடி மற்றும் மாநில நெருக்கடியை வேறுபடுத்துக.

(g) Doctrine of Pith and Substance.

மையக் கருப்பொருள் கோட்பாடு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Newspaper printed and published in Bengaluru had wide circulation in the territory of Mumbai. It conducted 'Cross Word' puzzle. A large number of people in Mumbai subscribed to the crossword puzzle. The State Government of Mumbai imposed tax on the above competition. Decide the validity of law.

பெங்களூருவில் அச்சிடப்பட்டு மற்றும் பிரசுரிக்கப்படும் ஒரு செய்தித்தாள் மும்பை எல்லைவரம்பில் பெரியளவில் விற்பனை செய்யப்பட்டது. அந்தச் செய்தித்தாள் குறுக்கெழுத்து புதிர் போட்டி நடத்தியது. மும்பையில் அதிகப்படியான மக்கள் குறுக்கெழுத்து போட்டியில் கலந்து கொண்டனர். மும்பை அரசு மேற்படி போட்டி நடத்தியதற்கு வரி விதித்தது. அச்சட்டத்தின் செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

9. A military truck carried some Jawans to a training spot. Because of the negligent driving of the driver, the truck met with an accident and a pedestrian died on the spot. The widow of pedestrian claimed compensation from the Central Government. Whether she will succeed?

ஒரு இராணுவ வாகனம், சில இராணுவ வீரர்களை ஒரு பயிற்சி மையத்திற்கு ஏற்றிச் சென்றது. அந்த வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால், ஒரு விபத்து ஏற்பட்டது. மேலும் ஒரு பாதசாரி சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். இறந்தவரின் மனைவி, மத்திய அரசிடம் இழப்பீடு கோரினார். அவர் வெற்றி பெறுவாரா?

10. A Government Servant was made to compulsorily retire in accordance with his Service Rules. He challenged the order of compulsory retirement. Decide, whether he can succeed in his case?

ஒரு அரசு ஊழியர், தன்னுடைய பணி விதிமுறைகளின் படி கட்டாய ஓய்விற்கு உட்படுத்தப்பட்டார். அவர் அந்தக் கட்டாய ஓய்வு உத்தரவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார். அவர் தன் வழக்கில் வெற்றி பெற முடியுமா என்பதை தீர்மானிக்கவும்?

---

Register No. | | | | | | | | |

**FA6B**

**6909-25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

COMPANY LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The Memorandum of Association is the Fundamental Law or Charter defining the objects and limiting the powers of a company" – Discuss.

   "அமைப்பு முறையேடு என்பது ஒரு நிறுவனத்தின் நோக்கங்களை வரையறுப்பதும் அதன் அதிகாரங்களை வரம்புக்குட்படுத்துவதுமான அடிப்படைச் சட்டம் அல்லது பட்டயமாகும்" – விவாதிக்க.

2. Examine the powers of director.

   இயக்குநரின் அதிகாரங்களை ஆய்வு செய்க.

3. Explain the advantages and disadvantages of SEBI.

   SEBIயின் மேன்மைகளையும் மேன்மையின்மைகளையும் விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the term "debenture" and the rights and remedies available to a debenture holder.

   "கடனீட்டுப் பத்திரம்" என்னும் சொற்றொடர், மற்றும் கடனீட்டுப் பத்திரதாரரின் உரிமைகள் மற்றும் தீர்வழிகளை விளக்குக.

5. Give an account on official liquidator. What are the powers of liquidator?

கலைப்பு அலுவலர் பற்றி குறிப்பு எழுதுக. கலைப்பு அலுவலரின் அதிகாரங்கள் யாவை?

6. Explain the provisions of the Companies Act as to safeguard the interest of minority shareholders. Refer to decided cases.

நிறுவனச் சட்டத்தின் சட்டப் பிரிவுகளின் கீழ் எவ்வாறு சிறுபான்மை பங்குதாரர்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது என்பதை விளக்கவும். அதனை தகுந்த வழக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக. :

(a) Difference between Public Company and Private Company

பொது நிறுவனத்திற்கும் மற்றும் தனியார் நிறுவனத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

(b) Women Directors

மகளிர் இயக்குநர்கள்

(c) NCLT

தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம்

(d) Class meeting

வகுப்பு கூட்டம்

(e) Amalgamation of Companies

நிறுவனங்களை இணைத்தல்

(f) Kotla Venkatasamy vs Ramamurthy

கோட்லா வெங்கடசாமி எதிர் இராமமூர்த்தி

(g) Revenue Capital

இருப்பு மூலதனம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' a proxy of 'A' filed proxy form in the ABON Co. Ltd. seven days ahead of its Annual General Body Meeting. Whether it is valid or not?

அபான் என்ற நிறுவனத்தின் வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு 'அ' என்ற உறுப்பினருக்குப் பதிலாக 'இ' என்ற நபர் கலந்து கொள்ள பதிலாள் மனு 7 நாட்களுக்கு முன்பாகவே தாக்கல் செய்யப்பட்டது. அது செல்லுபடியாகுமா?

9. 'A' and 'B' were the only members of a Private Company. Both die in an accident. The Registrar of Companies wants to delete the company from the register. Can he do so?

'அ' மற்றும் 'ஆ' இருவரும் ஒரு தனியார் நிறுமத்தின் ஏக உறுப்பினர்கள். அவர்கள் இருவரும் ஒரு விபத்தில் இறந்து விடுகின்றனர். நிறுமப் பதிவாளர் அந்நிறுமத்தை நிறுமப் பதிவேட்டிலிருந்து நீக்க விரும்புகிறார். அவர் அவ்வாறு செய்ய இயலுமா?

10. The main object of a company is to manufacture cement, whereas the Board of Directors decided to go in for manufacturing solar panel and related products. Discuss.

ஒரு நிறுவனத்தின் முக்கிய நோக்கம் சிமெண்ட் உற்பத்தி செய்வது. ஆனால் இயக்குநர்கள் குழுவின் முடிவின்படி சூரியத்தகடு மற்றும் அதனோடு இணைந்த பொருட்களை தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. விவாதிக்க.

---

Register No. | | | | | | | | |

**FA6C**

**6910–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

LABOUR LAW – I

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the role of International Labour Organisation in setting Labour standards with special reference to India.

   தொழிலாளர்களின் தரத்தை ஏற்படுத்துவதில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பங்கினை இந்தியாவை மேற்கோள்காட்டி விவாதிக்கவும்.

2. Define Minimum Wage. State the procedure for fixing and revising minimum wages under the Minimum Wages Act, 1948.

   குறைந்தபட்ச ஊதியம் வரையறை செய்க. 1948ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்ணயம் செய்யவும், மாற்றி அமைத்தலுக்குமான உரிய நடைமுறைகளைக் குறிப்பிடுக.

3. Who is responsible for Payment of Wages? State the authorities under the Payment of Wages Act and explain their powers.

   ஊதியம் வழங்குதலுக்கு யார் பொறுப்பு? ஊதியம் வழங்குதல் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரிகளைக் குறிப்பிட்டு அவர்களின் அதிகாரங்களை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss about the mode of Registration of Trade Unions.

   தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்படுவதற்கான நடைமுறையைப் பற்றி விவாதிக்கவும்.

5. Evaluate the provisions relating to constitution of Labour Court and its powers and jurisdiction.

தொழிலாளர் நீதிமன்றத்தின் அமைப்பு, அதிகாரம் மற்றும் ஆள்வரை வரம்பு ஆகியன குறித்தான சட்ட வகையங்களை மதிப்பீடு செய்க.

6. Explain the date of operation of a Certified Standing Order and the procedure for modification of a certified standing order.

சான்றளிக்கப்பட்ட நிலையாணையினை செயல்படுத்தும் தேதி மற்றும் அதனை திருத்தம் செய்வதற்கான நடைமுறைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக. :

(a) Board of Conciliation

சமரச வாரியம்

(b) National Tribunal

தேசிய தீர்ப்பாயம்

(c) Unfair Labour Practices

நேர்மையற்ற தொழில் நடைமுறைகள்

(d) Theories of wages

ஊதியக் கோட்பாடுகள்

(e) Deductions under the Payment of Wages Act

ஊதியம் வழங்குதல் சட்டத்தின் கீழ் கழிவுகள்

(f) Items contained in the Schedule of Standing Orders Act

நிலை ஆணைகள் சட்டத்தின் அட்டவணையில் உள்ள இனங்கள்

(g) Period of operation of the award.

தீர்வம் அமுலிலிருக்கும் காலம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. An employer declared Lay off to his workmen and offered them alternate employment in his branch office situated around 12 kms. away from the actual employment. Employees refused to accept this employment. The laid off workmen claimed lay off compensation. Advise the employer.

பணியாண்மையர் ஒருவர் தனது தொழிலாளர்களை நிற்பாட்டி வைத்து, அதற்கு பதிலாக 12 கி.மீ. தொலைவில் இருக்கும் தனது கிளை அலுவலகத்தில் வேலை செய்யப் பணிக்கிறார். நிற்பாட்டி வைத்த தொழிலாளர்கள் அவ்வேலையை ஏற்க மறுத்து, தங்களுக்கு நிற்பாட்டி வைத்தலுக்கான இழப்பீட்டினை கோரினார்கள். பணியாண்மையருக்கு ஆலோசனை வழங்குக.

9. The appropriate Government in respect of the employment in a textile industry, fixed minimum rate of wages. While fixing the minimum wages it gave due consideration to the financial capacity of the employer. The employees challenged the same. Decide.

நெசவு தொழிலுக்கு குறைந்தபட்ச சம்பளத்தை உரிய அரசு நிர்ணயம் செய்தது. அவ்வாறு செய்யும்போது வேலையளிப்பவரின் நிதிநிலைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இதனை தொழிலாளர்கள் எதிர்க்கின்றனர். முடிவு செய்க.

10. In an Industrial undertaking, a portion of employees started a Trade Union. The management sponsored another trade union with financial support. Whether the management has committed any offence? If so, decide the punishment.

ஒரு தொழில் நிர்வாகத்தில், தொழிலாளர்கள் ஒரு பகுதியினர் ஒரு தொழிற்சங்கத்தை தொடங்கியுள்ளனர். நிர்வாகம் நிதியுதவியுடன் வேறு ஒரு தொழிற்சங்கத்தை முன்னிலை படுத்துகின்றது. நிர்வாகம் ஏதேனும் குற்றம் புரிந்துள்ளதா? அவ்வாறெனில் தண்டனையை முடிவு செய்க.

---

Register No. | | | | | | | | |

**FA5E**

**6906–25**

(For the candidates admitted from 2017 – 2018 to 2021 – 2022)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF EVIDENCE

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the kinds of presumptions under the Indian Evidence Act and the legal incidents of each of them.

   இந்திய சாட்சிய சட்டத்தில் உள்ள பல்வகை அனுமானங்களையும் அவற்றின் சட்டமுறையான சிறப்புக் கூறுகளையும் விளக்குக.

2. Define Motive. When and to what extent is the preparation and conduct of a party to a proceedings is relevant?

   உட்கருத்து என்பதை வரையறு. எப்பொழுது மற்றும் எந்த அளவிற்கு ஒரு வழக்கு நடவடிக்கையில் தரப்பினரின் குற்றம்புரிய தயாராகுதல் மற்றும் நடத்தை தொடர்புடையதாகும்?

3. Discuss in detail about the examination of witnesses in chief, cross examination and the method of impeaching the credibility of the witnesses.

   சாட்சிகளை விசாரணை செய்வது தொடர்பாக முதல் விசாரணை, குறுக்கு விசாரணை மற்றும் சாட்சிகளின் நம்பகத்தன்மையை பழித்தல் முறை குறித்து விரிவாக விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain fact, fact in issue and relevant fact.

   பொருண்மை, பிரச்சனையிலுள்ள பொருண்மை மற்றும் தொடர்புள்ள பொருண்மை குறித்து விளக்குக.

5. "A Confession given to a police officer during the course of investigation is irrelevant". Comment and state the exceptions.

"ஒரு காவல்துறை அதிகாரியிடம் புலன் விசாரணையின் பொழுது கொடுக்கும் குற்ற ஏற்புரை தொடர்புடையதாகாது". விதிவிலக்குகளுடன் விவரிக்கவும்.

6. Explain the nature of privileged communication under the Indian Evidence Act.

இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் காப்புடைய செய்திகளின் தன்மையை விவரிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Proved.

நிரூபிக்கப்பட்டது.

(b) Secondary evidence.

சார் நிலை சான்று.

(c) Ancient document.

தொல்லாவணம்.

(d) Hostile witness.

பிறழ் சாட்சி.

(e) Public document.

பொது ஆவணம்.

(f) Res Gestae.

ஒன்றிய செயல்.

(g) Alibi.

வேற்றிட வாதம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is tried for the murder of 'B' by intentionally shooting him dead. The fact is that 'A' has shot 'B' on other occassions. Explain the relevancy of the fact.

'B' என்பவரை 'A' என்பவர் உள்நோக்கத்துடன் சுட்டுக் கொலை செய்ததாக வழக்கு விசாரணை நடந்து வருகிறது. 'B' என்பவரை 'A' என்பவர் வேறு நிகழ்வுகளில் சுட்டுள்ளார் என்ற பொருண்மை உள்ளது. அந்தப் பொருண்மையின் தொடர்புடைமையை விவரிக்கவும்.

9. 'A' is accused of murder of 'C'. During trial 'A' confesses, I and 'B' murdered 'C'. Can this confession be considered against 'B'?

'A' என்பவர் 'C' என்பவரைக் கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்படுகிறார். வழக்கு விசாரணையின் போது, 'A' தானும் 'B'ம் சேர்ந்து 'C'ஐ கொலை செய்ததாக வாக்குமூலமளிக்கிறார். அந்தக் குற்றஏற்புரை வாக்குமூலத்தை 'B'–க்கு எதிராக கருத்தில் கொள்ள முடியுமா?

10. 'A' is charged with travelling in a train without a ticket. 'A' denies the charge. On whom does the burden of proof lies?

'A' என்பவர் இரயிலில் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்ததாக குற்றம் சாட்டப்படுகிறார். 'A' அந்தக் குற்றத்தை மறுக்கிறார். இதனை நிரூபிக்க வேண்டிய சுமை யார் மீது உள்ளது?